வரகாபொல பிரதேச சபை - 2022

---------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரகாபொல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் வரகாபொல பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கைகணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு,இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில்மேலும்விபரிக்கப்பட்டுள்ளது.எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில்என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் ததுவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆண்டிற்குரியதாக 2023 ஆண்டில் செலுத்திய ரூபா 15,705 தொகைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்ய முடியாது போனதாக. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | வேலைகள் 97 இற்காக மாகாண சபையிலிருந்து பெறவேண்டிய மற்றும் ஒப்பந்ததாரருக்கு செலுத்த வேண்டிய ரூபா 50,654,679 வை, கடன்படுனர் மற்றும் கடன்கொடுனராக கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2023 ஆண்டில் சரிசெய்வதாக. | - மேற்படி - |
| (இ) | 2021 ஆண்டு மூலதனமாக்கியிருந்து ரூபா 16,600,229 ஆன சொத்தொன்று 2022 ஆண்டு கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது | மீண்டும் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (ஈ) | வீதி அபிவிருத்திக்காக கிடைத்த ரூபா 552,344 தொகையை ஒப்பந்ததாரிற்கு செலுத்தி இருந்த போதும் தொடர்ந்தும் வைப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 இறுதிக் கணக்குடன் சரிசெய்வதாக. | கணக்கை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (உ) | மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்படாத ரூபா 6,098,247 ஆன 12 வேலைகள் மற்றும் இரத்துச் செய்த ரூபா 781,346 ஆன வேலையொன்று கடன்கொடுனரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | கடன்கொடுனர் பதிவேட்டிலிருந்து அகற்றுவதாகஇ | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | கடந்த ஆண்டுகளில் மற்றும் மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 2,299,593 தொகை அந்த அந்த ஆண்டுகளின் வருமானத்திற்கு எடுக்காது பொது வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உரிமையாளர்கள் முன்வராவிட்டால் வருமானத்திற்கு எடுப்பதாக | - மேற்படி - |
| (எ) | ரூபா 27,023 ஆன பண்டக பற்றாக்குறையை அறவிடும் வரை, பெறவேண்டியதாக கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 15 கணக்கு விடயங்களின் மீதிகள் துணை பதிவேடுகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 59,128,143 ஆன வித்தியாசம் நிலவியது. | நீண்டு காலமாக நிலவி வரும் இவ் வித்தியாசத்தை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | நிதிக்கூற்றுக்கள், மூல ஆவணங்களுடன் இணக்கம் செய்ய கூடியதாக இருத்தல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான ஆவணச்சான்றின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 63,564893 ஆன 06 செலவின விடயங்களிற்கான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | அட்டவணை தயாரிக்கப்படுகிறது. வைப்பு விடயங்கள் 3 இற்கு அட்டவணை இல்லையென | அட்டவணைகள் சமரப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6.4 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 19 பிரிவிற்கு முரணாக, சபை நிதியத்திலிருந்து உறுப்பினர் கடிதத் தலைப்பிற்கு ரூபா 74,800 செலவிடப்பட்டு இருந்தது. | அவர்களின் மக்கள் சேவைகளை இலகுவாக செய்து கொள்ள அவ்வாறு வழங்கப்பட்டது. | சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபை நிதியத்திலிருந்து மக்கள் பிரதிநிதிகளுக்கு கடன் வழங்க சட்ட ஏற்பாடுகள் இல்லாத போதும், 2022 ஆண்டினுள் 14 உறுப்பினர்களுக்கு ரூபா 350,000 கடனாக வழங்கப்பட்டிருந்தது. | 2022 ஆண்டில் முற்பணம் வழங்கி ஐந்து தவணைகளில் 2022 ஆண்டினுள்ளேயே அறவிட்டதாக. | பிரசேத சபை சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்ப்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் | | | |
| (i) நி.பி. 371 | 2021 மற்றும் 2022 ஆண்களில் வழங்கிய ரூபா 72,845 ஆன முற்பணத்தை மீளாய்வாண்டு இறுதி வரை தீர்த்திருக்கவில்லை. | அம் முற்பணம் தீர்க்கப்படவில் லை என. | நிதிப் பிரதமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) நி.பி. 571 | 2017 முதல் 2020 ஆண்டுகளிற்குரிய ரூபா 304,822 ஆன 10 வைப்புக்களை தீர்த்திருக்கவில்லை. | நிதிப் பிரதமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக. | நிதிப் பிரதமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 8,418,099 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 36,951,441 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| வருமான மூலம் | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2021 மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரி மற்றும் வரி | 9,045,000 | 8,180,704 | 7,509,631 | 4,613,492 | 9,197,000 | 8,051,768 | 8,617,567 | 4,316,982 |
| வாடகை | 26,806,647 | 12,164,136 | 12,110,967 | 839,276 | 19,000,000 | 10,047,850 | 9,022,362 | 1,634,754 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,549,100 | 1,286,595 | 1,320,145 | 2,950 | 4,825,100 | 1,869,158 | 1,872,958 | 36,500 |
| ஏனைய வருமானம் | 9,030,000 | 10,943,014 | 8,086,126 | 508,043 | 9,244,000 | 11,224,433 | 8,726,473 | 352,060 |
| | 48,430,747 | 32,574,449 | 29,026,869 | 5,963,761 | 42,266,100 | 31,193,209 | 28,239,360 | 6,340,296 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| வீதவரி, ஏக்கர் வரி மற்றும் கடை வாடகை போன்ற வருமான விடயங்களிலிருந்து 2022 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 5,094,991 அறவிட வேண்டியதாக காணப்பட்டது. அப் பெறுமதியினுள் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டிற்கு இடையிலான காலம் பழைய ரூபா 2,297,337 ஆன மீதியும், 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 2,507,454 ஆன மீதியும் காணப்பட்டது. | ஆதனத் தடை, ஆணைச்சீட்டு விநியோகம், ஆகிய வற்றினூடாக நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 வங்கிக் கணக்குகளில் பிழையாக குறிப்பிட்டிருந்த ரூபா 74,747 தொகையை சரிசெய்திருக்காததுடன் அவற்றில் ரூபா 70,897 தொகை 11 ஆண்டுகளை விட பழையதானது. | சரிசெய்ய நடவடிககை எடுக்கப்பட்டுள்ளது. | பிழையை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலக்கம் 05/2010 கொண்ட உள்ளூராட்சி சுற்றறிக்கை பிரகாரம் சமூக தேவையின் மீதான முன்னுரிமை பதிவேட்டில் தொடர் ஒழுங்கில் பாதைகளை தெரிவு செய்யாது மீளாய்வாண்டினுள் ரூபா 740,562 செலவிட்டு 07 பாதைகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தன. | கிராம மட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளின் முன்னுரிமை மீது சமர்ப்பிக்கப்படும் முன்பொழிவுகள் சபைக்கு முன்வைக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதாக. | குறித்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் ரூபா 25,999,860 ஆன கடன்கொடுனர் மீதியினுள் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டிற்கு இடையிலான ரூபா 15,305,093 ஆன மீதியும், 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 1,011,286 ஆன மீதியும் காணப்பட்டது | காணப்படும் கடன்கொடுனர் மீதியை அகற்றுதல் பொருத்தமானதா என விசாரித்து உடனடியாக கணக்குடன் செம்மையாக்கி பதிவேட்டிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை கடன்கொடுனர் மீதியை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | நிலையான சொத்துப் பதிவேட்டிலுள்ள 17 காணிகள், டெக்டரொன்று, டேலரொன்று மற்றும் பொப்கெட் இயந்திரமொன்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | கொடிக் கம்பங்கள் 30 இனது பற்றாக்குறை மற்றும் கொடிக் கம்பங்கள் 529 இனது பெறுமதியை கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2023 ஆண்டில் கணக்கீடு செய்வதாக. | கணக்கை சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான முச்சக்கர வண்டியின் மைலோ மீற்றர் செயலற்று காணப்பட்ட 2021 சனவரி மாதம் முதல் 2022 மார்ச் மாதம் வரையான காலத்தினுள் செலுத்திய கி.மீ. 7825 இன் சரியான தன்மையை உறுதி செய்து கொள்ள முடியாதிருந்தது. | தற்போது புதிய மீற்றர் ஒன்றை பொருத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக. | கி.மீ. 7825 இன் சரியான தன்மையை உறுதி செய்து கொள்ள வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றறிக்கை 11/2010 பிரகாரம், வருமானம் ஈட்ட முடியுமான இயந்திர உபகரணங்களை இலவசமாக வழங்கக் கூடாத போதும், தவிசாளரின் ஆலோசனை பிரகாரம் அன்னலவாக ரூபா 3,361,500 ஆன வருமானத்தை ஈட்டிக் கொள்ள இயலுமான 747 இயந்திர மணித்தியாலங்கள் இலவசமாக வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறே, பெக்கோ இயந்திரத்தின் வெளிச் செல்லல் மற்றும் உள்வரவு தொடர்பாக வாயில் அறிக்கை பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டிய பின்னர் மதிப்பீடொன்றின் பிகராரம் பெறுமதியை கணக்கிட்டு பின்னர் வருமானத்திற்கு சீராக்கவும், பெக்கோ இயந்திரத்தின் வெளிச் செல்லல் மற்றும் உள்வரவு தொடர்பாக வாயில் அறிக்கை பராமரிக்கவும் நடவடிக்கை எடுப்பதாக. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மலசல கழிவுகளை வெளியிட பொருத்தமான இடமொன்று இல்லாததால் 2016 ஆண்டில் கிடைத்த கழிவகற்றும் பவுசர் 2022 திசெம்பர் வரையும் வருமானம் ஈட்ட முடியாது பயனற்று நிலவியது. | மலசல கழவற்ற இடமொன்று சபைக்கு இது வரை இல்லையென. | மலசல கழிவுகளை மீள்சுழற்சிப்படுத்தும் இடமொன்றை நிர்மாணிக்க வேண்டும். |

| 3.3 | சொத்துக்கள் முகாமைத்துவம் கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | டெக்டர் ஒன்று 10 ஆண்டுகளிற்கும் அதிக காலமாக செயலற்று நிலவியது. | பராதீனம் செய்வதாக. | பராதீன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | ரூபா 267,300 ஆன குப்பை பாத்திரங்கள் உள்ளடங்களான 653 பண்டங்கள் 02 ஆண்டுகளிற்கு அதிப காலமாக விளைவற்று நிலவியது. | குப்பை பாத்திரங்களை பகிர்ந்தளிப்பாகவும், மற்றைய பொருட்களை பராமரிப்பு தேவைக்காக களஞ்சியத்தில் நிறுத்தி வைத்துள்ளதாக. | பண்டங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |
| (இ) | 01 ஏக்கர் 10 பர்சஸ் அளவான 02 காணிகளில் அனுமதியின்றி நிர்மாணித்துள்ள வீடுகள் தொடர்பாக எவ்வித முயற்ச்சியும் எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக முன்நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் பாதுபாப்பை உறுதி செய்து கொள்ள வேண்டும் |
| (ஈ) | வரகாபொல மணிக்கூட்டுக் கோபுரம் மற்றும் டிஜிடல் பெயர் பலகை உள்ள சபைக்கு சொந்தமான காணியை நிலையான சொத்துப் பதிவேட்டிற்கு உட்படுத்தி இருக்கவில்லை. | அரச மதிப்பீடு கிடைத்த உடனே சொத்துப் பதிவேட்டிற்கு உட்படுத்துவதாக. | சபைக்கு சொந்தமான காணியை நிலையான சொத்துப் பதிவேட்டிற்கு உட்படுத்த வேண்டும் |

**3.4 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| எவ்வித டென்டர் கோரலும் இன்றி சபை அங்கீகாரத்தின் மீது ரூபா 348,000 இற்கு 04 வண்டிச் சில்லுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் மேற்கொள்ளும் அனைத்து கொள்வனவுகளையும் உரிய டென்டர் கோரலின் மீது மாத்திரம் மேற்கொள்வதாக. | டென்டர் நடைமுறை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்பள்ளி கட்டுப்பாட்டாளர்களின் ஆட்சேர்ப்புத் திட்டம் பிரகாரம் தகைமையுடைய கட்டுப்பாட்டாளரை சேவையில் ஈடுபடுத்துவதற்கு பதிலாக இரண்டு தொழிலாளர்களை அப்பதவிக்கு இணைத்திருந்தனர். | முன்பள்ளி கட்டுப்பாட்டாளர் 02 பதவிகளும் நிரப்பப்படவில்லை என. | தகைமையின் மீது முன்பள்ளி கட்டுப்பாட்டாளர்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அங்கீகார ஆளணியில் 2022 திசெம்பர் 31 திகதியன்று 25 வெற்றிடங்கள் மற்றும் ஒருவரின் மிகையும் நிலவன. அங்கீகார தொழிலாளர் எண்ணிக்கையை விஞ்சி 22 தொழிலாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டு இருந்ததுடன் ஏனைய தொழிலாளர் எண்ணிக்கைக்கு உட்பட்ட 18 பேர்கள் ஈடுபடுத்த வேண்டிய சரியான கடமைகளிற்கு பதிலாக ஏனைய கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | தேவையான அங்கீகாரத்துடன் ஊதிய அடிப்படையில் ஊழயர்கள் ஆடசேர்க்கப்பட்டுள்ளனர். தொழிலாளர்களில் விஷேட திறமை மற்றும் தகைமையுடையவர்களை வெற்றிடமாகவுள்ள பதவிகளிற்கு இணைக்கப்பட்டுள்ளது உரிய பணிகளை தொடர்ந்து தடையின்றி மேற்கொண்டு செல்லவாகுமென. | தேவைக்கேட்ப வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2022 திசெம்பர் 31 திகதியன்று மரணித்த, இடமாறிச் சென்ற, சேவையை இடைநிறுத்திய மற்றும் கடமையை விட்டுச் சென்ற 08 அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய 01 ஆண்டிற்கும் 24 ஆண்டுகளிற்கும் இடையிலான காலம் பழைய ரூபா 117,339 ஆன கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | இக் கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிலுவை ஊழியர் கடன் மீதயை அறவிட வேண்டும். |